**நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல் துறை**

| அனுப்புநர் | பெறுநர் |
|---|---|
| திரு.P.குமார் சிங்,<br>ஆணையாளர்,<br>நகராட்சி அலுவலகம்,<br>கடையநல்லூர். | நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர்<br>திருநெல்வேலி. |

**ந.க.எண். 45/2020/சி1** **நாள்:30.07.2020**

அய்யா,

**பொருள்:-** நகர்மன்ற கூட்டம் – கடையநல்லூர் நகராட்சி – சாதாரணக் கூட்டம் 29.06.2020 அன்று நடைபெற்றது– கூட்ட நடவடிக்கைகள் மற்றும் தீர்மானங்கள் விவரம் சமர்ப்பித்தல் – தொடர்பாக.

*****

கடையநல்லூர் நகராட்சியில் தனி அலுவலர் மற்றும் ஆணையாளர் அவர்களால் 29.06.2020 அன்று சாதாரணக் கூட்டம் நடத்தப்பட்டது. மேற்படி கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் விவரம் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் பார்வைக்காக இத்துடன் இணைத்து பணிந்து அனுப்பி வைக்கப்படுகிறது.

ஆணையாளர்,
கடையநல்லூர் நகராட்சி.

**இணைப்பு – தீர்மான நகல்கள்**

**கடையநல்லூர் நகர்மன்றத்தின் அவசரக்கூட்டம்– 2020ம் ஆண்டு ஜீன் மாதம் 29ம் தேதி செவ்வாய்க் கிழமை காலை 4.00 மணியளவில் தனி அலுவலர் அவர்களால் நடத்தப்பட்டது அக்கூட்டத்தில் நிறைவேற்றப்பட்ட தீர்மானங்கள் பின்வருமாறு.**

**பொருள் எண் : 1**

தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் ஆய்வுக் குறிப்பு எண். 01/2020, நாள்.15.06.2020ல் தெரிவித்துள்ளபடி ஒருங்கிணைந்த பழங்குடியினர் மேம்பாட்டுத் திட்டத்தின் கீழ் (CTDP) (Comprehensive Tribal Development Programme) கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.1ல் கருப்பாநதி அணை அருகில் அமைந்துள்ள பழங்குடியினர் குடியிருப்பில் (கலைமான் நகர்) சேதமடைந்த 22 எண்ணம் தனித்தனி (Individual) வீடுகள் மற்றும் மின்விளக்குகளை புதியதாக அமைக்கவும், அங்குள்ள குழந்தைகளின் பாதுகாப்பு நலன் கருதி அங்கன்வாடி கட்டிடம் மற்றும் சமுதாய கழிப்பிடம் புதியதாக அமைக்கவும் உரிய முன்மொழிவுகளை அனுப்பி வைக்குமாறு தெரிவித்துள்ளார்கள். அதனடிப்படையில் மேற்கண்ட திட்டத்தின் கீழ் பணிகள் மேற்கொள்ள தயார் செய்யப்பட்ட திருத்திய மதிப்பீடு ரூ.159.00 இலட்சத்திற்கு மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் நிர்வாக அனுமதி பெற மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**( ந.க.எண்.1990/2020/இ1 )**

**தீர்மான எண். 127**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 2**

நாடு முழுவதும் கொரோனா தொற்றுநோய் பரவி பொதுமக்கள் பாதிக்கப்பட்டு வரப்படுகின்றனர். கொரோனா தொற்று தடுப்பு நோய் குறித்து மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி, அவர்களின் ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தெரிவித்துள்ளபடி, நாள்தோறும் இந்நகராட்சி பொதுமக்களுக்கு விழிப்புணர்வு ஏற்படுத்தும் வகையில் வட்டாட்சியர் மற்றும் ஆணையாளர் அவர்களின் தலைமையில் கொரோனா தடுப்பு விழிப்புணர்வு கூட்டம் நடத்தப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில் நகராட்சி அலுவலக நகர்மன்றக் கூட்ட அரங்கில் உள்ள நகர்மன்ற உறுப்பினர் கூட்ட மேடை (Table) மிகவும் பழுதடைந்து உள்ளது. நகர்மன்ற ஊழியர்களுக்கு போதுமான கழிப்பிட வசதி இல்லை. எனவே, பழுதடைந்த நிலையிலுள்ள நகர்மன்ற கூட்ட மேடையை அகற்றிவிட்டு புதியதாக சேர்கள் (Chairs) அமைத்திடவும், கழிவறை வசதிகள் செய்திடவும் நகர்மன்ற கூட்டரங்கில் புணரமைப்பு பணிகள் செய்திடவும் தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடுத் தொகை ரூ.500000/க்கு நகர்மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிகளுக்கான செலவினத்தொகையை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக,

**( ந.க.எண்.1975/2020/இ1 )**

**தீர்மான எண். 128**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 3**

இந்நகராட்சி அனைத்து பிரிவுகளின் பயன்பாட்டில் இருந்து தற்சமயம் பழுதடைந்த நிலையில் உள்ள லேசர் பிரிண்டர்கள் HP3015, 5 எண்ணம் மற்றும் இதர மாடல்கள் பழுதடைந்த நிலையிலுள்ள பிரிண்டர்களின் அனைத்து பாகங்களையும் மாற்றம் செய்ய வேண்டிய நிலையில் உள்ளது. மேலும், உள்ளாட்சி தேர்தல், மக்கள் தொகை கணக்கெடுப்பு மற்றும் கொரோனா வைரஸ் சம்பந்தப்பட்ட அறிக்கைகள் தயார் செய்யும் பணிகளுக்கு தற்சமயம் பிரிண்டர்கள் பற்றாக்குறை இருப்பதால் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி அனைத்து அலுவலக பிரிவுகளில் பயன்படுத்தி தற்போது பயன்படுத்த முடியாத நிலையில் உள்ள கணினி பிரிண்டர்களை பழுதுநீக்கம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.60,000/ மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**( ந.க.எண்.1721/2020/இ1 )**

**தீர்மான எண். 129**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 4**

கடையநல்லூர் நகராட்சி தலைமை பணியிடத்தில் உள்ள புதிய கட்டிடத்தில் மோட்டார் இயக்கக்கூடிய 35.00HB, Panel மற்றும் EB SERVICE CABLE ஆகியவை புதியது மாட்டிவிடப்பட்டுள்ளது. மேலும், அதன் அருகில் உள்ள 50KVA Genset மற்றும் புதியதாக தோண்டப்பட்ட திறந்த

வெளிக்கிணற்றில் உள்ள Eb Service மற்றும் 15.00HP Starter இணைக்கும் இடத்தினையும் சேர்த்து 4 எண்ணம் Earth Bit அமைக்கப்பட வேண்டும். ஆகவே, மேற்காணும் பணிகளின் பாதுகாப்பினை கருத்திற்கொண்டும், குடிநீர் பணியின் அவசியத்தை கருத்திற்கொண்டும் ரூ.90,000/ உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ளவும், அதற்கான செலவினத்தொகைக்கும் மன்றத்தின் அனுமதி வைக்கப்படுகிறது.

மேற்காணும், பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ள அங்கீகாரத்திற்காக,

**( ந.க.எண்.1972/2020/இ1 )**

**தீர்மான எண். 130**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 5**

இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.32, ரகுமானியாபுரம் 8வது தெரு, மேற்கு பகுதியில் உள்ள தெருவில் குடிநீர் பகிர்மான குழாய் இல்லாததால், அப்பகுதி பொதுமக்களுக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க இயலாத நிலை உள்ளது. இந்நிலையில் நகராட்சி நிர்வாகம் மற்றும் குடிநீர் வழங்கல்துறை அரசாணை (நிலை) எண்.126, நாள்.28.11.2018ல் தெரிவித்துள்ளபடி மேற்காணும் பகுதிக்கு புதிய குடிநீர் இணைப்பு வழங்க புதியதாக பகிர்மான குழாய் அமைக்கும் பணிக்கு உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,00,000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக,

**( ந.க.எண்.1973/2020/இ1 )**

**தீர்மான எண். 131**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 6**

கடையநல்லூர் நகராட்சி வார்டு எண்.27, தேரடி திடலில் உள்ள நகராட்சி ஆரம்ப சுகாதார நிலையம் அருகில் அமையப்பெற்ற நகராட்சிக்கு சொந்தமான காலியிடத்தில் நான்கு வருவாய் தரும் இனங்களான வணிகவளாக கடைகள் (10 x 10) அளவில் கட்டப்பட்டு உள்ளது. இந்நிலையில் மேற்காணும் கடைகளுக்கு புதியதாக மின் இணைப்பு மற்றும் மின்சாதன வசதிகள் செய்யும் பொருட்டு தயார் செய்யப்பட்ட உத்தேச மதிப்பீடுத்தொகை ரூ.95000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும், அங்கீகாரத்திற்காக சமர்ப்பிக்கப்படுகிறது.

**( ந.க.எண். 3033 /2020/இ1)**

**தீர்மான எண். 132**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 7**

இந்நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளப்பட்டு வருகின்றது. கொரோனா பாதிக்கப்பட்ட பகுதிகளிலிருந்து தற்போது 144 பேர் வீடுகளில் தனிமைப்படுத்தப்பட்டுள்ளனர்.

தமிழ்நாடு மாசுக்கட்டுப்பாட்டு வாரியம் அவர்களின் கடிதம் TN/TNPCB/F. 007641/BMWM/2020-4 நாள்.13.04.2020ன் படி தனிமைப்படுத்தப்பட்டவர்களின் வீடுகளில் சேகரமாகும் குப்பை கழிவுகள் மற்றும் நகர்ப் பகுதிகளில் மக்கள் மற்றும் நகராட்சி பணியாளர்களால் பயன்படுத்தப்படும் முகக்கவசம், கையுறைகள், முழு கவச உடைகள் போன்றவற்றை அந்தந்த பகுதிகளில் உள்ள மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தால் அங்கீகரிக்கப்பட்ட நிறுவனம் மூலம் பாதுகாக்கப்பட்ட முறையில் அப்புறப்படுத்திட தெரிவிக்கப்பட்டுள்ளது.

எனவே, இந்நகராட்சிக்குட்பட்ட பகுதியில் தனிமைப்படுத்தப்பட்ட வீடுகளில் சேகரமாகும் குப்பை கழிவுகள் மற்றும் நகர்ப் பகுதிகளில் மக்கள் மற்றும் நகராட்சி பணியாளர்களால் பயன்படுத்தப்படும் முக கவசம் கையுறைகள், முழு கவச உடைகள் போன்றவற்றை மாசுக்கட்டுப்பாட்டு வாரியத்தின் அங்கீகாரம் பெற்ற Aseptic System திருநெல்வேலி மூலம் உரிய வழிகாட்டுதலின் படி அப்புறப்படுத்தி அழித்திடவும் அதற்காகும் செலவினத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**( ந.க.எண். 1452/2020/எச்1 )**

**தீர்மான எண். 133**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 8**

இந்நகராட்சி பொதுசுகாதாரப்பிரிவில் இயங்கும் TN76 AF 5635 வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்ய மன்றத்தின் பின்னேற்பினை எதிர்நோக்கி தனி அலுவலர் அவர்கள் 17.03.2020 முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் மேற்படி பணிக்கு 08.04.2020 அன்று ஒப்பந்தப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்காணும் ஒப்பந்தப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | ஒப்பந்தப்புள்ளி கொடுத்தவர்கள் விபரம் | முன்வைப்புத்தொகை செலுத்திய விபரம் | ஒப்பந்தப் புள்ளி விகிதம் |
|---|---|---|---|
| 1. | மூஸா இஞ்ஜினியரிங் ஓர்க்ஸ் 194, செங்கோட்டை ரோடு, தென்காசி. | முன்வைப்புத்தொகை செலுத்த வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது. | ரூ.44900/ |
| 2. | ஸ்ரீமுருகா மோட்டார் ஒர்க்ஸ், 3/514, தென்காசி செங்கோட்டை மெயின்ரோடு, கொட்டாகுளம் | முன்வைப்புத்தொகை செலுத்த வரி விலக்கு அளிக்கப்பட்டுள்ளது | ரூ.51800/ |
| 3. | நடராஜன் மோட்டார் ஒர்க்ஸ், 1ஏ, பழைய பேருந்து நிலையம் ரோடு, தென்காசி | முன் வைப்புத்தொகை எதும் செலுத்தப்படவில்லை | ரூ.60900/ |

**அலுவலக குறிப்பு**

1. வரப்பெற்ற மூன்று விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் ரூ.44900/ கொடுத்துள்ள வரிசை எண்.1ல் கண்ட மூஸா இஞ்ஜினியரிங் ஒர்க்ஸ், 194, செங்கோட்டை ரோடு, தென்காசி, என்பவரின் ஒப்பந்தப்புள்ளியினை ஒப்புக்கொண்டு வாகனத்தின் பழுதுகளை நீக்கம் செய்ய அங்கீகாரத்திற்காக.
2. மேலும், பொதுசுகாதார அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி தனி அலுவலர் அவர்கள் 17.03.2020 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதின் அடிப்படையில் பழுது நீக்கம் செய்ய நடவடிக்கை மேற்கொண்டமைக்கு அங்கீகாரத்திற்காக,

**( ந.க.எண்.1441/2020/எச்1 )**

**தீர்மான எண். 134**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 9**

இந்நகராட்சி பகுதியில் கொரோனா தொற்று நோய் தடுப்பு நடவடிக்கைகளை தீவிரமாக மேற்கொள்ளும் பொருட்டு நோய்த் தடுப்பு பணிகளுக்கு அத்தியாவசியமாக தேவைப்படும் முழு உறை (ஒரு முறை பயன்படுத்தக்கூடியது) கூட்டுறவு சங்கம் மூலம் பெற்றிட கீழ்க்கண்ட விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன.

| வ. எண் | பொருள் | Thoothukudi Dist. Cleaning Products Producers Service Industrial Co-Operative Society Ltd., 28, Muthhanandhapuram 1st Street, Kovilpatti. (விலை ரூ) | The Chidambaranar Labour Contract Service Industrial Co-Operative Society Ltd. thoothukudi. (விலை ரூ) |
|---|---|---|---|
| 1. | முழு உறை (ஒருமுறை பயன்படுத்தக்கூடியது) | 360.00 | 370.00 |

மேற்கண்ட இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலைவிகிதம் கொடுத்துள்ள Thoothukudi Dist. Cleaning Products Producers Service Industrial Co-Operative Society Ltd, 28, Muthhanandhapuram 1st Street, Kovilpatti. நிறுவனத்திற்கு அனுமதியும் அதற்கான உத்தேச செலவினம் ரூ.40,000/ (ரூபாய் நாற்பதாயிரம் மட்டும்)ற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

**( ந.க.எண்.1452/2020/எச்1 )**

**தீர்மான எண். 135**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 10**

தென்காசி மாவட்ட ஆட்சித்தலைவர் அவர்களின் 03.05.20ம் தேதிய ஆய்வுக் கூட்ட அறிவுரையின்படி, கொரோனா தொற்று நோய்த்தடுப்பு நடவடிக்கைக்கு முகக் கவசம் அணியாதவர்கள், சமூக இடைவெளி பின்பற்றப்படாமல் இருந்தவர்கள் மற்றும் கடைகளில் குளிர்சாதன வசதி பயன்பாடு ஆகிய குறைபாடுகளுக்கு அபராதம் விதிக்கும் பொருட்டு புத்தகம் 25 எண்ணம் அச்சிட்டு வழங்கிட தனி அலுவலர் அவர்களின் 10.06.2020ம் தேதி முன் அனுமதி வழங்கியதின் அடிப்படையில் உள்ளூர்

விலைப்புள்ளிகள் 08.05.2020 கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விலைப்புள்ளி விபரம் | எண்ணம் | தொகை ரூ |
|---|---|---|---|
| 1. | Classic Offset & Cards, 151/8, New Bazaar, Kadayanallur | 1 Book | 175/- |
| 2. | M.K.Printers,Main Road, Kadayanallur. | 1 Book | 185/- |
| 3. | S.K.Press, Main Bazaar Road, Kadayanallur | 1 Book | 200/- |

இதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள Classic Offset & Cards, 151/8, New Bazaar, Kadayanallur நிறுவனத்தின் மூலம் மேற்படி இரசீது புத்தகங்கள் வாங்கியதற்கு அனுமதியும் அதற்கான செலவீனத்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1452/2020/எச்.1)

**தீர்மான எண். 136**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 11**

சென்னை நகராட்சி நிர்வாக ஆணையர் அவர்களின் 17.04.2020ம் தேதிய ந.க.எண்.5437/ஜே2/2020ன் படியும், தென்காசி மாவட்ட ஆட்சித் தலைவர் அவர்களின் அ7/870/2020, நாள்.06.05.2020ம் தேதிய கடித அறிவுரையின்படியும் கொரோனா தொற்று நோய்த்தொடுப்பு நடவடிக்கைக்கு நகராட்சி பணியாளர்களுக்கும் மற்றும் கொரோனா பாதிக்கப்பட்ட பகுதிகளில் உள்ள பொதுமக்களுக்கு முகக் கவசம் வழங்கிட தெரிவிக்கப்பட்டுள்ளது. எனவே, தற்போது கொரோனா வைரஸ் தொற்று நோய்த்தடுப்பு பணிகளுக்கு தேவைப்படும் 3 Ply Face Mask முகக் கவசங்களுக்கு தனி அலுவலர் அவர்கள்15.06.2020ம் தேதி முன் அனுமதி வழங்கியதின் அடிப்படையில் உள்ளூர் விலைப்புள்ளிகள் 16.06.2020 அன்று கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விலைப்புள்ளி விவரம் | எண்ணம் | தொகை. (GST சேர்த்து) ரூ |
|---|---|---|---|
| 1. | Alfaj Trading Company, 77/1, V.V. Nagar, Tirunelveli. | 1 எண்ணம் | 7.36 |
| 2. | Ameer Trading, 18/106A, Pazhathottam, Kanyakumari. | 1 எண்ணம் | 8.40 |
| 3. | Mohammed Ali Trading, Azhampanagilai Pulipanam, Kattathurai, Marthandam | 1 எண்ணம் | 9.46 |

இந்த குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள ‘Alfaj Trading Company’, 77/1, V.V. Nagar, Tirunelveli நிறுவனத்தின் மூலம் மேற்படி ம் 3 Ply Face Mask முகக்கவசம் 10,000, (பத்தாயிரம்) எண்ணம் வாங்கிட விநியோக உத்திரவு வழங்கியதற்கு அனுமதியும் அதற்காகும் செலவினம் ரூ.73,600/ (ரூபாய் எழுபத்திமூன்றாயிரத்து அறநூறு மட்டும்) மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1452/2020/எச்1)

**தீர்மான எண். 137**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 12**

திடக்கழிவு மேலாண்மை திட்டத்தின் கீழ் இந்நகராட்சி பகுதியில் தற்போது செயல்படுத்தப்பட்டு வரும் 3 + 2 (அடுத்த வாரம் ஆரம்பிக்கப்பட உள்ளது) பசுமை நுண்ணுயிர் உரக்குடில்களில் நுண்ணுயிர் திரவம் (EM Solution) தயாரிக்க தயிர் வெல்லம் ஆகியவை தேவைப்படுகிறது. இந்நகர்மன்ற தீர்மான எண்.150, நாள்.31.07.2019ன் படி மேற்படி தயிர், வெல்லம் வாங்கிட உத்தேச செலவினம் ரூ.2.00 இலட்சத்திற்கு மன்ற அனுமதி பெறப்பட்டுள்ளது. இவைகளை வாங்கிட உள்ளூர் விலைப்புள்ளி கோரப்பட்டதில் கீழ்க்கண்டவாறு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விலைப்புள்ளி விபரம் | வெல்லம் 1 கிலோ ரூ | தயிர் 1 லிட்டர் ரூ |
|---|---|---|---|
| 1. | 0.1114 கடையநல்லூர் கூட்டுறவு பண்டகசாலை லிமிடெட், கடையநல்லூர் | 51 | 63 |
| 2. | ஆர்.சித்திரைகண்ணு, மளிகை வியாபாரம், கீழ பஜார், கடையநல்லூர் | 56 | 65 |
| 3. | T.T.18 கடையநல்லூர் பொது ஊழியர்கள் பண்டகசாலை லிமிடெட், கடையநல்லூர். | 55 | 64 |

இதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள 0.1114 கடையநல்லூர் கூட்டுறவு பண்டகச்சாலை லிமிடெட், கடையநல்லூர், நிறுவனத்தின் மூலம் பசுமை நுண் உரக்குடில்களுக்கு தேவையான, தயிர், வெல்லம் வாங்கிட மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.2395/2019/எச்.1)

**தீர்மான எண். 138**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 13**

திருநெல்வேலி நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் அவர்களின் 18.05.2020ம் தேதிய வாட்ஸ்ஆப் செய்தி அறிவுரையின்படியும், கொரோனா தொற்று நோய்த்தடுப்பு முன்னெச்சரிக்கை நடவடிக்கையாக, காய்ச்சல் உள்ளவர்களுக்கு பல்ஸ் துடிப்பை ஆரம்ப நிலையிலேயே கண்டறியும் பொருட்டு தேவைப்படும் PULSE OXIMETER 10 எண்ணம் வாங்கிட தென்காசி மாவட்ட இணை இயக்குநர் அவர்களின் அறிவுரையின்படி கீழ்க்கண்டவாறு மூன்று விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளது.

| வ. எண் | விலைப்புள்ளி விபரம் | எண்ணம் | தொகை ரூ (GST சேர்த்து) |
|---|---|---|---|
| 1. | "We can Medicare" Jeeva Road, Kattapomman Nagar, Madurai | 1 எண்ணம் | 1680/ |
| 2. | HR Medical System, 25/1, Ayyanar Kovil 1st Street, Sellur, Madurai | 1 எண்ணம் | 1848/ |
| 3. | Legend Bio Medicals, 38A/6, Ahimshapuram 5th Street, New Vishalam, Madurai. | 1 எண்ணம் | 1960/ |

இதில் குறைந்த விலைப்புள்ளி அளித்துள்ள "We can Medicare" Jeeva Road, Kattapomman Nagar, Madurai நிறுவனத்தின் மூலம் 10 எண்ணம் PULSE OXIMETER வாங்கிட விநியோக உத்திரவு வழங்கியதற்கு அனுமதியும், இதற்கான செலவினம் ரூ.16,800/(ரூபாய் பதினாராயிரத்து எண்ணூறு மட்டும்)த்திற்கும் மன்ற அனுமதி வேண்டப்படுகிறது.

(ந.க.எண்.1452 / 2020 / எச்1)

**தீர்மான எண். 139**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 14**

2019 - 2020 ஆண்டிற்கு இந்நகராட்சி வருட மூலதன நிதி, குடிநீர் நிதி, கல்விநிதி கணக்குகளை கணிணி மூலம் கணக்கு முடித்தமைக்கு திரு. A.இராஜாமணி அவர்களுக்கு ரூ.50,000./க்கான தொகை வழங்க 25.06.2020ல் தனி அலுவலரால் முன் அனுமதி வழங்கப்பட்டுள்ளது. மன்றத்தின் அங்கீகாரத்திற்கு வைக்கப்படுகிறது.

(ந.க.எண். 2074/2020/பி1)

**தீர்மான எண். 140**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 15**

இந்நகர்மன்றத்தீர்மானம் எண்.188, நாள்.25.05.2017 மற்றும் இவ்வலுவலக செயல்முறை ஆணை ந.க.எண்.3344/2014/அ3, நாள்.14.07.2017ன்படி இந்நகராட்சி பேரூந்து நிலையத்தில் தென்பக்கம் உள்ள கடை எண்.3க்கு திரு.சு.கருப்பசாமி, த.பெ.சுடலைமுத்து, 69சி, புதுமனை தெரு, காசிதர்மம் என்பவருக்கு 01.06.2017 முதல் 31.05.2020 வரை மாத வாடகை ரூ.4850/என நிர்ணயம் செய்து உரிமம் வழங்கப்பட்டுள்ளது. மேற்கண்ட கடையின் உரிமம் 31.05.2020 உடன் முடிவடைவதால் மேற்படி,

கடையின் உரிமத்தினை மேலும், மூன்றாண்டுகளுக்கு 01.06.2020 முதல் 31.03.2023 வரை புதுப்பித்து உத்தரவு வழங்க அன்னாரின் 26.05.2020ம் தேதிய மனுவில் கோரியுள்ளார்.

மேலும், அன்னார் இவ்வலுவலக ரசீது எண்.706, நாள்.21.05.2020ன்படி புதுப்பித்தல் கட்டணம் ரூ.500/ செலுத்தியுள்ளார். எனவே, மேற்கண்ட கடையின் உரிமத்தினை 01.06.2020 முதல் 31.03.2023 வரை உரிமத்தினை புதுப்பிக்கவும், ஏற்கனவே, உள்ள மாதவாடகை ரூ.4850/ல் 15சதவீதம் உயர்வு செய்து ரூ.5580/– ((4850 + 730 = 5580) என நிர்ணயம் செய்து உத்தரவு வழங்கவும் மன்றத்தின் அனுமதி வேண்டப்படுகிறது.

**( ந.க.எண்.3344/2014/அ3 )**

**தீர்மான எண். 141**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 16**

கடையநல்லூர் நகராட்சி குடிநீர் பிரிவிலுள்ள கீழ்க்காணும் இடங்களில் உள்ள ஜெனரேட்டர்கள் பராமரிப்பு செய்து இஞ்சின் ஆயில், டீசல் பில்டர், ஆயில் பில்டர் ஆகியவை மாற்றம் செய்யப்பட வேண்டும்.

**<u>தலைமை நீரேற்று நிலையம் ( Head Works)</u>**

(i) 125 KVA ஜெனரேட்டர்

(ii) 50 KVA ஜெனரேட்டர்

**<u>பெரிய நாயகன் கோவில் கிணறு</u>**

30 KVA ஜெனரேட்டர்

**<u>இரண்டாத்து முக்கு கிணறு</u>**

15 KVA ஜெனரேட்டர்

**<u>இடைநிலை நீரூற்று நிலையம்</u>**

25KVA ஜெனரேட்டர்

தற்போது நகராட்சிப் பகுதிகளில் அதிக காற்று வீசுவதால் மின்இணைப்பு அடிக்கடி துண்டிப்பு ஆகிறது. எனவே, குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி, மேற்காணும் 5 எண்ணம் ஜெனரேட்டர்களை பழுதினை சரி செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.62000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் இணைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காகவும்,

**( ந.க.எண்.1834/2020/இ1 )**

**தீர்மான எண். 142**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 17**

கடையநல்லூர் நகராட்சி இரண்டாத்து முக்கு கிணற்றுக்கு வரும் மின்விநியோகம் அடிக்கடி துண்டிப்பு ஆகி மின்கம்பம் உடைந்து மேற்காணும் கிணற்றின் மின் இணைப்பு வயர் பழுதாகி உள்ளது. இதனால், மோட்டார் இயக்க முடியாத நிலையில் உள்ளது. இந்நிலையில் மேற்காணும் பழுது சரிசெய்யும் வரை அருகில் உள்ள மற்றொரு மின் கம்பத்திலிருந்து புதிய வயர் மற்றும் பியூஸ் கேரியர் பொருத்தி இயக்கப்பட வேண்டும். மேலும், தற்போது ஆற்றில் தண்ணீர் அடிக்கடி குறைவதால் குடிநீர் பணியின் அவசர அவசியம் கருதி மேற்காணும் பணிகளை மேற்க்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.23000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்காணும் பணிக்கான செலவினத்தொகையை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும், அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1835/2020/இ1)**

**தீர்மான எண். 143**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 18**

கடையநல்லூர் நகராட்சி இடைநிலை நீரூற்று நிலையில் உள்ள 12.5 HP, Induction Motor பழுதாகி உள்ளது. மேற்காணும் மோட்டாரிலுள்ள Bearing, Coil warnish மற்றும் Terminal Box, 200 AMP Fuse Carrier ஆகியவை மாற்றி இயக்கப்பட வேண்டும். மேலும் இந்த மோட்டார் மூலம் கிருஷ்ணாபுரம், குமந்தாபுரம், ரகுமனியாபுரம் மற்றும் பாரதியார் தெருவிற்கு பம்பிங் செய்யப்படுகிறது. ஆகவே குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் பொதுமக்களின் நலனை கருத்திற்கொண்டு மேற்காணும்

பணியினை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.18500/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் மேற்கொள்ளவும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண்.1836/2020/இ1)**

**தீர்மான எண். 144**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 19**

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி, நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி, அவர்களின் நேரடி ஆய்வு மற்றும் அறிவுரையில் பொதுமக்களுக்கு குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகள் மூலம் விநியோகம் செய்யப்படும். குடிநீர் சுகாதார முறையில் இருத்தல் வேண்டும் என அறிவுறுத்தியுள்ளார். அதனடிப்படையில் இந்நகராட்சிப் பகுதிகளில் உள்ள 13 எண்ணம் குடிநீர் மேல்நிலை நீர்த்தேக்க தொட்டிகளை மாதம் இருமுறை சுத்தம் செய்து பொதுமக்களுக்கு சுத்தமான குடிநீர் விநியோகம் செய்யப்பட வேண்டும். இந்நிலையில் மேற்காணும் பணிகளை மேற்கொள்ள இந்நகராட்சியில் போதிய வேலைப்பளு பணியாளர்கள் இல்லாத நிலையில் ஒப்பந்தப் அடிப்படையில் ஒப்பந்தக்காரர் மூலம் அவசர அவசியம் கருதி மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.4,50,000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு சமர்ப்பிக்கப்படுகிறது. மேற்காணும் பணிக்கான செலவினத் தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் மேற்கொள்ளவும், அங்கீகாரத்திற்காகவும்,

**(ந.க.எண்.1585/2020/இ1)**

**தீர்மான எண். 145**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 20**

மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி அவர்களின் கொரோனா தடுப்பு ஆய்வுக்கூட்ட அறிவுரையில் தெரிவித்துள்ளபடியும் நகராட்சி நிர்வாக மண்டல இயக்குநர் திருநெல்வேலி அவர்களின் வாட்ஸ்அப் மூலம் அனுப்பப்பட்ட செய்தியின் படியும் கொரோனோ முன்னெச்சரிக்கை தடுப்பு நடவடிக்கையாக இந்நகராட்சி அலுவலக பிரிவுகளில் பொருத்தப்பட்டுள்ள குளிர்சாதன இயந்திரம் அனைத்தினையும் முழு பரிசோதனை செய்து சுத்தம் செய்யப்பட வேண்டும் என தெரிவிக்கப்பட்டுள்ளது. அதனடிப்படையில் இந்நகராட்சி கீழ்க்காணும் அனைத்து அலுவலக பிரிவுகளிலுள்ள குளிர்சாதன இயந்திரத்தை முழுபரிசோதனை செய்து பழுதுகள் நீக்கம் செய்யவும் அதற்கான உத்தேச செலவினத்தொகை ரூ.35000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

1. ஆணையாளர் அறை
2. பொறியாளர் அறை
3. நகரமைப்பு அலுவலர் அறை
4. இளநிலைபொறியாளர் அறை
5. நகர்மன்றத்தலைவர் அறை
6. சுகாதார அலுவலர் அறை
7. உதவி கணினி திட்ட அமைப்பாளர் அறை
8. வரி வசூல் மையம் அறை
9. வரி வசூல் கட்டும் இடம் கிழக்கு
10. வரி வசூல் கட்டும் இடம் மேற்கு

**(ந.க.எண். 2093 /2020/இ1)**

**தீர்மான எண். 146**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 21**

கடையநல்லூர் சட்டமன்ற உறுப்பினர் அவர்கள் கொரோனா தடுப்பு பணிகள் குறித்து இந்நகராட்சிப் பகுதிக்கு நேரடியாக ஆய்வுக் மேற்கொள்ளப்பட்டதில், இந்நகராட்சி புதிய பேரூந்து நிலையத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளதை உடன் சரிசெய்யவும் மற்றும் அம்மா உணவகத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்துள்ளதால் அதனையும் உடனடியாக சரிசெய்யுமாறு அறிவுறுத்தியுள்ளார்கள். மேலும், நகராட்சி அலுவலகத்திற்கு வந்து செல்லும் பொதுமக்களுக்கும், அலுவலக பணியாளர்களுக்கும்

நகராட்சி அலுவலகத்தில் அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரம் பழுதடைந்து உள்ளதை உடன் சரி செய்யவும், ஆணையாளர் அவர்களின் ஆய்வில் தெரிவித்துள்ளார்கள். ஆகவே, மேற்காணும் மூன்று இடங்களில் (புதிய பேருந்துநிலையம், அம்மா உணவகம் மற்றும் நகராட்சி அலுவலகம்) அமைக்கப்பட்டுள்ள குடிநீர் சுத்திகரிப்பு இயந்திரத்தை பழுதுநீக்கம் செய்து புதியதாக பில்டர் மாற்றம் செய்யவும் அதற்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ,2,20,000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது. மேற்காணும் பணிக்கான செலவினத்தொகையினை இந்நகராட்சி குடிநீர் தலைப்பு நிதியின் கீழ் வழங்கவும் அங்கீகாரம் வேண்டியும் சமர்ப்பிக்கப்படுகிறது.

**( ந.க.எண். /2020/இ1)**

**தீர்மான எண். 147**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 22**

கடையநல்லூர் நகராட்சி எல்லைக்குட்பட்ட வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் உள்ள தரைமட்ட நீர்த்தேக்க தொட்டியில் உள்ள மோட்டார் மற்றும் ஆழ்துளைகிணறு (Bore well) ஆகியவைகள் ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தக்காரர் மூலம் ஓராண்டு பராமரிப்பு பணிகள் மேற்க்கொள்ளப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில் மேற்காணும் பராமரிப்பு பணியில் 13.05.2020ம் தேதியுடன் முடிவடைந்துள்ளது. ஆகவே, குடிநீர் பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும், பொதுமக்களின் நலனினை கருத்திற்கொண்டு வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் காணப்படும் தரைமட்டத்தொட்டியில் உள்ள மோட்டார் மற்றும் ஆழ்துளைகிணறு (Bore Well) ஆகியவைகளை ஒப்பந்த அடிப்படையில் ஒப்பந்தக்காரர் மூலம் மீண்டும் ஒருவருட காலத்திற்கு பராமரிப்பு பணிகளை மேற்கொள்ளவும் அதற்கான உத்தேச செலவுத்தொகை ரூ.580000/க்கு மன்ற அங்கீகாரம் வேண்டி சமர்ப்பிக்கப்படுகிறது.

**( ந.க.எண். 2077 / 2020 / இ1 )**

**தீர்மான எண். 148**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 23**

இந்நகராட்சிப் பகுதிகளில் தினந்தோறும் மேற்கொள்ளப்படும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் மற்றும் தொற்றுநோய் தடுப்பு பணிகள் குறித்த புகைப்படங்களை கலர் பிரிண்டராக எடுத்து மாவட்ட ஆட்சித்தலைவர் தென்காசி, மண்டல இயக்குநர் திருநெல்வேலி, நகராட்சி நிர்வாக இயக்குநர் சென்னை ஆகியோர்களுக்கு வெளி இடங்களில் எடுத்து அனுப்பப்பட்டு வரப்படுகின்றது. இதனால் காலதாமதம் ஏற்படுவதோடு குறித்த நேரத்தில் அறிக்கைகள் மற்றும் கலர் புகைப்படங்கள் சமர்ப்பிக்க இயலாத நிலை ஏற்படுகின்றது. இந்நிலையில் டெங்கு காய்ச்சல், கொரோனா தடுப்பு பணிகள் மற்றும் திடக்கழிவு மேலாண்மை பணிகள் குறித்த அறிக்கைகள் மற்றும் புகைப்படங்கள் உடனுக்குடன் எடுத்து உயர் அலுவலகங்களுக்கு அனுப்ப புதியதாக தரம் உயர்ந்த கலர் பிரிண்டர் வாங்கி வழங்கவும், அதற்கான உத்தேச மதிப்பீட்டுத்தொகை ரூ.48000/க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

**அ.** மேற்காணும் கலர் பிரிண்டரினை மத்திய அரசு நிர்ணயம் செய்த விலை விகிதத்தில் (DGS & D) Gem (Government E market Place)ல் தகுதிப்பெற்ற நிறுவனங்களின் மூலம் வாங்கி வழங்கவும், அங்கீகாரத்திற்காக.

**ஆ.** மேற்காணும் கலர் பிரிண்டர் Gem விலை விகிதத்தில் இல்லாத பட்சத்தில் கொரோனோ தடுப்பு பணியின் அவசர அவசியத்தை கருத்திற்கொண்டு தகுதிப்பெற்ற நிறுவனங்களிடம் வெளி மார்க்கெட்டில் விலைப்புள்ளிகள் பெற்று வாங்கி வழங்கவும் அங்கீகாரத்திற்காக.

**( ந.க.எண். 1971/2020/இ1 )**

**தீர்மான எண். 149**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண் : 24**

கடையநல்லூர் நகராட்சி அலுவலக பணியாளர்களின் நலன் மற்றும் பாதுகாப்பினை கருத்திற்கொண்டு பொதுப்பிரிவு, காசாளர் அறை, வருவாய்பிரிவு காசாளர் அறை, கணினி வரி வசூல் மையம், ஆணையர் அலுவலகம் (பொதுமக்கள் காத்திருப்பு அறை) மற்றும் முதல் தளம் தெற்கு வரண்டா ஆகிய விடுபட்ட இடங்களில் கண்காணிப்பு கேமரா பொருத்தவும் மற்றும் கண்காணிப்பு கேமராக்களில் கவரும் நிகழ்வுகளை கண்காணிப்பதற்கு ஆணையாளர் அறையில் 32" LED TV வாங்கி பொருத்தவும் மற்றும் அதற்கான வயரிங் பணிகளை மேற்கொள்ளவும் உத்தேச மதிப்பீட்டுத் தொகை ரூ.2,50,000/-க்கு மன்றத்தின் அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

மேற்காணும் பணிக்கான செலவினத்தொகை இந்நகராட்சி வருவாய் தலைப்பு நிதியின் கீழ் மேற்க்கொள்ளவும், அங்கீகாரத்திற்காக.

**( ந.க.எண். 1971 / 2020 / இ1 )**

**தீர்மான எண். 150**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்.25**

இந்நகராட்சி பகுதி வார்டு 1 முதல் 33 வரையுள்ள பகுதியில் கொரனா தொற்று ஏற்பட்டுள்ள பகுதியில் பாதிக்கப்பட்டோர் மற்றும் அன்னாருடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் தொற்று பாதிக்கப்பட்ட மற்றும் கொரனோ தொற்று பாதிக்கப்படும் பகுதியில் வசிக்கும் பொதுமக்கள் வெளியில் நடமாட்டத்தை முற்றிலும் தவிர்க்கும் பொருட்டு அப்பகுதியை 14 நாட்களுக்கு தகரசீட் மற்றும் சவுக்கு கம்புகள் மூலம் தடுப்பாணைகள் அமைக்கும் பணியினை அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதி ரூ.2,50,000/– உத்தேச மதிப்பீட்டில் மேற்கொள்ள இந்நகராட்சி தனி அலுவலரின் முன்அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் அவசர அவசியம் கருதி இந்நகராட்சி தகுதி பெற்ற ஒப்பந்தக்காரர்களிடம் 12.06.2020 அன்று விலைப்புள்ளிகள் கோரியதில் கீழ்காணும் இரண்டு விலைப்புள்ளிகள் வரப்பெற்றுள்ளன

| வ.எண் | ஒப்பந்ததாரரின் பெயர்(ம) முகவரி | விலைப்புள்ளி விலைவிகிதம் |
|---|---|---|
| 1. | திரு. K.S. அப்துல் மாலிக்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | தகரசீட் ஒன்றிற்கு ரூ.600/–<br>சவுக்கு மரக்கம்பு கிலோ ஒன்றிற்கு ரூ.11.75/–<br>ஆட்கள் கூலி நபர் ஒன்றிற்கு ரூ.650/– |
| 2 | திரு. M. ராஜேந்திர பிரசாத்,<br>ஒப்பந்தக்காரர்,<br>கடையநல்லூர். | தகரசீட் ஒன்றிற்கு ரூ.605/–<br>சவுக்கு மரக்கம்பு கிலோ ஒன்றிற்கு ரூ.12/–<br>ஆட்கள் கூலி நபர் ஒன்றிற்கு ரூ.650/– |

மேற்காணும் விபரப்படி வரப்பெற்ற இரண்டு விலைப்புள்ளிகளில் குறைவான விலை விகிதம் கொடுத்துள்ள திரு. K.S.அப்துல் மாலிக், என்ற ஒப்பந்தக்காரர் என்பவரின் விலைப்புள்ளியை ஒப்புக்கொண்டு மேற்காணும் பணிகளை மேற்க்கொள்ளும் பணிக்கு மன்ற அனுமதி வேண்டி சமர்பிக்கப்படுகிறது.

கொரனோ தடுப்பு பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும், பொதுமக்கள் நலனை கருத்திற் கொண்டு இந்நகராட்சி தனி அலுவலர் .06.2020 அன்று முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிப்படையில் வேலை உத்திரவு வழங்க நடவடிக்கை மேற்க்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1993/2020/இ1)**

**தீர்மான எண். 151**

அனுமதிக்கப்படுகிறது.

**பொருள் எண்.26**

இந்நகராட்சிப் பகுதி வார்டு எண்.32 ரகுமானியாபுரம் 8ம் தெருவில் 24/2 என்ற முகவரியில் வசித்துவரும் ஹலிதா நர்கீஸ், க/பெ.ஜாபலி அலி என்பவருக்கு கொரோனோ தொற்று உறுதியாகி (Postive) மருத்துவ மனையில் அனுமதிக்கப்பட்டு மருத்துவ சிகிச்சை அளிக்கப்பட்டு வரப்படுகின்றது. இந்நிலையில் கொரோனோ தொற்று நோயால் பாதிக்கப்பட்டோர் மற்றும் அன்னாருடன் தொடர்புடைய நபர்கள் மற்றும் பாதிக்கப்பட்ட நபர் வசிக்கும் பகுதியை முற்றிலுமாக 14 நாட்களுக்கு தடுப்பாணை(Lock) செய்ய வேண்டியுள்ளது. ஆகவே கொரோனோ தடுப்பு பணியின் அவசர அவசியம் மற்றும் அத்தியாவசியம் கருதியும் பொது மக்களின் நலனினை கருத்திற்கொண்டும் வார்டு எண்.1 முதல் 33 வரையுள்ள பகுதிகளில் கொரோனோ தொற்று நோய் பாதிக்கப்பட்ட மற்றும் பாதிக்கப்படும் பகுதிகளை முற்றிலுமாக தகரசீட் மற்றும் சவுக்கு கம்புகள் மூலம் தடுப்பாணைகள் செய்யும் அதற்கான உத்தேச செலவீணத் தொகை ரூ.2,50,000/– இலட்சத்திற்கு நகர்மன்ற அனுமதிக்கு வைக்கப்படுகிறது.

அ) கொரோனோ தொற்று நோய் தடுப்பு பணியின் அவசர அவசியத்தை முன்னிட்டு இந்நகராட்சி தனி அலுவலர் முன் அனுமதி வழங்கியுள்ளதன் அடிபப்படையில் தகுதிப்பெற்ற ஒப்பந்தகாரர்களிடம் விலைப்புள்ளியை பெற்று நடவடிக்கை மேற்கொள்ளப்பட்டதற்கும் அங்கீகாரத்திற்காக.

ஆ) மேற்காணும் கொரோனோ தடுப்பு பணிகளுக்கான செலவீனத் தொகையினை கொரோனோ நிதியிலிருந்து மேற்க்கொள்ளவும் அஅங்கீகாரத்திற்காக.

**(ந.க.எண். 1993/2020/இ1)**

**தீர்மான எண். 152**

அனுமதிக்கப்படுகிறது.

**(ஒம்)P.குமார் சிங்**
**தனி அலுவலர் மற்றும் ஆணையர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**

**/உண்மை நகல்/**

**ஆணையாளர்,**
**கடையநல்லூர் நகராட்சி.**